THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Saturday, 29th June 1957.

The House met in the Assembly Chamber, Fort St. George, at eleven of the clock, Mr. Speaker (THE HON. Dr. B. KRISHNA RAU) in the Chair.

64753

I.—QUESTIONS AND ANSWERS

STARRED QUESTIONS.

Hotel workers legislation

MR. SPEAKER : Is the Hon. the Minister for Industries ready with his answer for Question No. 24?

THE HON. SRI R. VENKATARAMAN : Yes, Sir.

MR. SPEAKER : நேற்றைய தினம் ஒத்திவைக்கப்பட்ட 24-வது கேள்வியை இப்பொழுது எடுத்துக்கொள்வோம்.

* 24 *Q*.—SRI N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Industries be pleased to state when the Bill granting protection to hotel workers will be published?

THE HON. SRI R. VENKATARAMAN : Steps are being taken to publish the draft Bill as early as possible.

SRI N. K. PALANISAMY : இம்மாதிரி பதில்தான் திருப்பித் திருப்பி இதுவரையில் சொல்லப்பட்டிருக்கிறது. ஒரு வருஷம் கழித்து மசோதா தயாராகி இருக்கிறது. இது எவ்வளவு சீக்கிரம் பிரசுரிக்கப்படும் என்று திட்டவட்டமாக சொல்லமுடியுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : இந்த மசோதா தயாரிக்கப்பட்டு விட்டது. "பட்ஜெட்" கூட்டம் முடிந்த பிறகு அதை நான் ஒரு முறை நேரில் பரிசீலனை செய்துவிட்டு பிரசுரிக்கலாம் என்று நினைக்கிறேன்.

SRI N. K. PALANISAMY : ஏற்கனவே ஹைகோர்ட்டு தீர்ப்புக்குப் பிறகு ஹோட்டல்களில் துடைக்கும் வேலை செய்யக்கூடிய தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு இல்லாமல் போய்விட்டது. அவர்களுக்கு இந்த மசோதாவில் பாதுகாப்பு அளிக்கப்பட்டிருக்கிறதா ?

THE HON. SRI R. VENKATARAMAN : இந்த மசோதாவில் என்னென்ன ஷரத்துக்கள் இருக்கின்றன என்பதை இப்பொழுது சொல்ல இயலாது.

SRI P. S. CHINNATHURAI : இந்த மசோதா சட்டசபை முன்பு சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்பாக தொழிலாளர் சங்கங்களின் ஆலோசனைக்காக அனுப்பப்படுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : அடுத்த கூட்டத்துக்கு முன்னால் இந்த மசோதா பிரசுரிக்கப்படும். தொழிற் சங்கங்கள் ஏதாவது இது விஷயமாக மகஜர்கள் அனுப்பினால் அவைகளை நான் பரிசீலனை செய்கின்றேன். வேறு விதத்தில் அவர்கள் இதைப் பரிசீலனை செய்ய வேண்டுமென்று சொன்னாலும் அதையும் சர்க்கார் கவனிக்கும்.

SRI K. VINAYAKAM : இந்த மசோதாவில் தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு அளிக்கும் அதே நேரத்தில் ஹோட்டல் வைத்து நடத்துகின்ற முதலாளிகளின் உரிமைகளும் பறிபோகாமல் விதிகளைச் சேர்த்துக்கொள்வதற்கு அரசாங்கம் முன்வருமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : தொழிலாளிகளுக்கும் முதலாளிகளுக்கும் நியாயமான முறையிலே சமூகமான உறவு ஏற்படவேண்டுமென்ற கொள்கையின் அடிப்படையில் காங்கிரஸ் சர்க்கார் நடைபெறுகின்றது. ஆகவே, கனம் அங்கத்தினர் அவர்கள் எந்தவிதமான கவலையும் கொள்ளவேண்டியதில்லை.

SRI A. A. RASHEED : Is the Hon. Minister aware of the fact that the proprietors are making a lot of money in the hotel business?

MR. SPEAKER : What has that to do with the main question? The hon. Member is raising a different question altogether. The hon. Member may put a separate question.

Border dispute

* 27 Q.—SRI N. K. PALANISAMY : Will the Hon. the Chief Minister be pleased to state the steps taken to settle the border dispute between Andhra and Madras States?

THE HON. SRI C. SUBRAMANIAM : The Government of India deputed Sri H. V. Pataskar to mediate in the Andhra-Madras border dispute. During the last week of December, a memorandum stating our case fully was presented to him by this Government. The matter is pending with Mr. Pataskar and his decision is awaited any moment.

SRI N. K. PALANISAMY : 9-ந் தேதி ஸ்ரீ படாஸ்கரிடம் ஆந்திர சர்க்கார் அவர்களுடைய கொள்கையை விவாதிக்கும்பொழுது சென்னை சர்க்கார் கிராமத்தை யூனிட்டாக வைத்துக்கொண்டு இந்த விஷயத்தை தீர்க்கலாம் என்று ஒத்துக்கொண்டிருந்தது. ஆனால் இந்த மாதிரி ஒரு பிரதேசம் " கண்டிகுவஸ் " ஆக இல்லாவிட்டாலும் சரி எந்த மொழி பேசுகிறவர்கள் ஒரு பிரதேசத்தில் அதிகப்படியாக இருக்கின்றார்களோ அந்த பாஷையைச் சேர்ந்த சர்க்காருக்கு அந்தப் பிரதேசம் போகவேண்டும் என்று நாங்கள் சொன்னோம். முதலில் இதை ஒத்துக்கொள்ளவில்லை. பிற்பாடு. . .

MR. SPEAKER : அங்கத்தினர் கேள்விகள் கேட்கும்போது சுருக்கமாக கேட்கவேண்டும் ; ஒரு பிரசங்கம் செய்யக்கூடாது என்று நேற்றே சொன்னேன். மறுபடியும் சொல்லுகிறேன். சுருக்கமாக கேள்விகள் கேட்க வேண்டும். அங்கத்தினர் அபிப்பிராயத்தை ஒரு கேள்வியின் மூலமாக சொல்லக்கூடாது.

SRI N. K. PALANISAMY : தொடர்ச்சியாக இல்லாத பிரதேசத்தில் எந்தப் பகுதி மக்கள் மெஜாரிடியாக இருக்கிறார்களோ அந்த ராஜ்யத்துக்கு அந்தப் பகுதி போகவேண்டும் என்று என் அரசாங்கம் ஒத்துக்கொண்டது?

THE HON. SRI C. SUBRAMANIAM : நான் கேள்வியை வெகு உன்னிப்பாக கவனித்துக்கொண்டிருந்த போதிலும் என்றால் அங்கத்தினருடைய கேள்வியை புரிந்து கொள்ள முடியவில்லை. ஒரு சமயம் ஸ்ரீ பழனிசுவாமி அவர்கள் ஹோசூர் பிரதேசத்தைப்பற்றி கேட்கிறார் என்று நினைக்கிறேன். அங்கத்தினர் அதுபற்றி கவலைப்படவேண்டியதில்லை. கூடிய சீக்கிரம் முடிவு வெளிவரும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.